KALĀ COMMUNE

**கலா கூட்டணி**

**எடுத்தாளுகை: மந்திரா ரணத்துங்க**

10 February - 28 February 2025

கட்புல மற்றும் அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகத்தின் 75வது ஆண்டு நிறைவை கௌரவிக்கும் முகமாக, கலா கூட்டணி வதிவிடத் திட்டமானது தெற்காசியா முழுவதிலுமிருந்து ஏழு கலைஞர்களை ஒன்றிணைத்து ஆராய்வதற்கும், உருவாக்குவதற்கும், இணைப்பதற்குமான களமாக செயற்படுகின்றது. இந் நிகழ்வானது, கலைஞர்களை அவர்களின் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளவும் கலை நடைமுறைகளைச் செம்மைப்படுத்தவும் ஒருவருக்கொருவர் ஊக்கமளித்துக் கொள்வதற்கும் உற்சாகப்படுத்துவதன் மூலம், கூட்டு அனுபவங்கள் மற்றும் கலாச்சார பரிமாற்றத்தின் மூலம் கற்றலின் சக்தியையும் எடுத்துக்காட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, கலைஞர்களின் படைப்புகளானது பாரம்பரிய நுட்பங்களினதும் சமகால அணுகுமுறைகளினதும் கலவையாக அடையாளம், சமூக மாற்றம், கலாச்சார பாரம்பரியம், கிராமப்புற வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழல் சார் அக்கறைகள் போன்ற கருப்பொருள்களைப் பற்றி பேசுகின்றன.

இக் கண்காட்சி அவர்களுடைய படைப்புகளை காட்சிப்படுத்துவது மட்டுமல்லாமல், ஆக்கத்திறன் மிக்க குரல்களை வடிவமைப்பதிலும், கற்பனைத்திறனை மேம்படுத்துவதிலும் கலை நடைமுறையின் முக்கியத்துவத்தையும் கொண்டாடுகிறது.

கலா கூட்டணி வதிவிடத் திட்டமானது இணைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மாற்றுவதற்கான ஒத்துழைப்பின் உறுதியை கொண்டாடுவதன் மூலம் தெற்காசியாவின் கலை, பாரம்பரியம் மற்றும் சமகால பரிசோதனையின் உணர்வை உள்ளடக்குகிறது.

KALĀ
COMMUNE

**சீமா சர்மா ஷா** *Seema Sharma Shah* (பிறப்பு 1966, வாரணாசி, இந்தியா; நேபாளம், காத்மாண்டுவில் வசித்து, பணிபுரிகிறார்) ஒரு புகழ்பெற்ற அச்சுக்கலைஞர். இவரது படைப்புக்கள் பௌத்த மெய்யியல், புராணங்கள் மற்றும் இயற்கை சூழலின் அகத்தூண்டுதல்களைக் கொண்டுள்ளன. அவரது பயிற்சி ஆன்மீக கருப்பொருள்களை, குறிப்பாக மனப்பாங்கு, நிலையற்ற தன்மை மற்றும் அகாவொளித்தன்மையை அச்சுக்கலை நுட்பங்களுடன் சிக்கலான முறையில் ஒருங்கிணைத்து அச்சுருவாக்குதல் மூலம் ஆராய்கிறது. உருப்பொறித்தல் எனப்படும் நுணுக்கமான அச்சுருவாக்கும் செயல்முறையானது மெழுகு பூசப்பட்ட உலோகத் தகட்டில் வடிவமைப்பை செதுக்குதல் ஆகும். பின்னர் தட்டை அமிலத்தில் அமிழ்த்துவதன் மூலம் அமிலத்தால் அரித்து வெளிப்படும் கோடுகளும், பள்ளங்களும் அச்சிடுவதற்கு மை பூசும் இடங்களாகும். இந்நுட்பம் ஷாவினுடைய ஆன்மீக வருணைகளுக்கு ஆழத்தை சேர்ப்பதுடன் நுண்மையான அமைப்புநயங்களையும் சிக்கலான விவரங்களையும் அடைய அனுமதிக்கிறது. ஷாவின் படைப்புகளில் சாக்கிய சமூகத்திற்குரிய தெய்வீகமாக மதிக்கப்படுகிற நேபாளத்தின் வாழும் தெய்வமான குமாரியின் கதை குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்துகிறது. கொண்டாடப்படும் அதேவேளை ஆன்மீக மகிமை மற்றும் ஆழ்ந்த தனிமை இரண்டையும் தன்னகப்படுத்திய குமாரி தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

ஷாவின் கலைப்படைப்புத் தொடரானது, தெய்வீக பக்தியின் உள்ளார்ந்த தனிமை மற்றும் தியாகத்தை ஆராய்வதன் மூலம் இரட்டை இருப்பைப் பிரதிபலிக்கிறது. மென்மையான நீலம், பச்சை போன்ற அமைதியான வண்ணங்கள் வழியாக, அவரது ஓவியங்கள் தியான அமைதியைத் தூண்டுவதுடன் பார்வையாளர்களை ஆன்மீக பயணங்கள் மற்றும் கலாச்சார மரபுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் போராட்டங்களைக் கருத்தில் கொள்ள அழைப்பு விடுக்கின்றன. ஷாவின் படைப்புகளானவை பொறிப்பு அச்சு கலை உருவாக்கத்தின் துல்லியத்தை மனித மற்றும் தெய்வீக அனுபவங்களைப் பற்றிய உள்நோக்க ஆய்வோடு கலந்து ஆன்மீக நடைமுறைகளின் உணர்ச்சிபூர்வமான சிக்கலை வெளிப்படுத்துகின்றன.

KALĀ COMMUNE

**சந்திர பட்டாச்சார்ஜி** *Chandra Bhattacharjee* (பிறப்பு 1961, கொல்கத்தா, இந்தியா; கொல்கத்தாவில் வசித்து, பணிபுரிகிறார்) எனும் சமகால கலைஞரின் படைப்புக்களானவை, அவருடைய இயற்கையுடனான தொடர்பு மற்றும் மனிதர்களினதும், விலங்குகளினதும், இயற்கை உலகினதும் சகவாழ்வு மீதான நம்பிக்கை ஆகியவற்றில் வேரூன்றியுள்ளன. அவரது இயற்கையை வரைவதற்கான குழந்தைப் பருவ ஆர்வத்தினதும், கல்விப் பின்னணியினதும் செல்வாக்கைக் கொண்ட பட்டாச்சார்ஜியின் படைப்புகள் வழ்வும் சுற்றுச்சூழலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருக்குமாற்றை பேசுகின்றன. கிராமப்புற நிலப்பரப்புகளையும் அவற்றில் வசிக்கும் மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் இடையிலான உறவுகளையும் வரைவதன் மூலம், அவரைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய அவரது அவதானிப்புகளை கலை மூலம் பிரதிபலிக்கின்றார். பட்டாச்சார்ஜியினுடைய நிறத்திற்கான எளிமையான அணுகுமுறையானது, தங்களுடைய அளவிடற்கரிய செழுமை பொருந்திய சித்திரங்களில் கட்டுப்படுத்தப்பட்ட நிறத்தொனிகளை பயன்படுத்தும் சந்தால் பழங்குடியினருடனான அவரது தொடர்பால் வெளிப்படுகிறது.

குறிப்பாக அவரது முந்தைய படைப்புகளில் மண் வண்ணங்களில் கவனம் செலுத்துவதன் மூலமும், சமீபத்திய படைப்புகளில் கறுப்பு - வெள்ளையின் சாயலை ஆராய்வதன் மூலமும், அவர் தனது படைப்பில் அமைதி, நெருக்கம் மற்றும் இயற்கை உலகிற்கான மரியாதை ஆகியவற்றை உட்சேர்க்கிறார். கலைஞர் வெவ்வேறு ஊடகங்களுடன் தனித்தனியாக வேலை செய்யும் அதே வேளையில், பயன்படுத்தப்படும் பருப்பொருட்களை பொருட்படுத்தாமல், ஒவ்வொரு படைப்பிலும் அவ்வூடகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதன் மூலம் தனது தனித்துவமான கலை அடையாளத்தைப் பாதுகாக்கிறார். மென்மையான, மண் சார்ந்த வண்ணங்களைப் பயன்படுத்துவதன் மூலமோ கறுப்பு - வெள்ளை நிறத்தில் உள்ள கூர்மையான வேறுபாடுகள் மூலமோ பல்வேறு நுட்பங்களில் தனித்துவமான மொழியைப் பேணும் அவரது திறன், உணர்ச்சி ஆழத்தையும் சிக்கலான தன்மையையும் வெளிப்படுத்துவதில் அவரது தேர்ச்சியைக் காட்டுகிறது. அவரது கலையானது மனித இருப்பு, இயற்கை மற்றும் விலங்குகளுக்கு இடையிலான கூட்டு வாழ்வின் உறவைப் பற்றி சிந்திக்க பார்வையாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த யுக்திகள் ஒன்றையொன்று வடிவமைக்கும் விதம் குறித்து ஒரு சக்திவாய்ந்த விளக்கத்தை வழங்குகின்றன.

KALĀ
COMMUNE

KALĀ
COMMUNE

**பங்கஜ் பன்வார்** *Pankaj Panwar* (பிறப்பு 1961, லக்னோ, இந்தியா; சாந்தி நிகேதன் போல்பூரில் வாழ்ந்து பணிபுரிகிறார்) பருப்பொருள்கள் மற்றும் வடிவங்கள் குறித்த புதுமையான ஆய்வுகளுக்கு பெயர் பெற்ற ஒரு சிற்பி. சாந்திநிகேதன், விஸ்வபாரதி பல்கலைக்கழகம் மற்றும் லண்டனில் உள்ள ராயல் கலைக் கல்லூரியில் பட்டம் பெற்ற பன்வாரின் பயிற்சி, வலுவான கற்பித்தல் அடித்தளம் மற்றும் பரிசோதனைக்கான அர்ப்பணிப்பால் ஆழமாக அறியப்படுகிறது. சாந்திநிகேதனின் நிறுவனர் ரவீந்திரநாத் தாகூரினதும் சிற்பக்கலை முன்னோடி ராம்கிங்கர் பைஜினதும் போதனைகளால் ஈர்க்கப்பட்ட பன்வார், பைஜின் மாறும் ஓவியங்கள் மற்றும் இயக்கத்தின் மீதான முக்கியத்துவத்திலிருந்து உத்வேகம் பெறுகிறார்.

சுஷேன் கோஷின் வழிகாட்டுதல், அவருக்கு வடிவியல் வடிவங்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வடிவங்களைப் பயன்படுத்துவதற்கான அறிமுகத்தை கொடுத்த அதே சமயம் கே.ஜி. சுப்பிரமணியனின் அரூபவாத வடிவங்களுக்கான அணுகுமுறை அவரது அழகியல் உணர்திறனை மேலும் வளப்படுத்தியது. இந்த தாக்கங்கள், அவரது கல்வியின் இடைநிலை நெறிமுறைகளுடன் இணைந்து, பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைக்கும் தனித்துவமான பாணிக்கு அடித்தளத்தை அமைத்தன.

ராகவ் கனேரியா, சோம்நாத் ஹோர் போன்ற பேராசிரியர்களிடம் பரோடாவிலும், பிரையன் நீல் மற்றும் எட்வர்டோ பாலோஸி ஆகியோரிடம் லண்டனிலும் தனது படிப்பை மேற்கொண்ட பன்வார், ஊடகத்தை கையாளுதல் மற்றும் இடஞ்சார்ந்த ஆய்வு ஆகியவற்றில் தனது நிபுணத்துவத்தை வளர்த்துக் கொண்டார். உலோகம், கல், மரம் மற்றும் கண்டெடுக்கப்பட்ட ஊடகங்களுடன் அவரது தொடர்ச்சியான துடிப்பான ஈடுபாடு, அடையாளம், நினைவகம் மற்றும் சமூக-அரசியல் எடுத்துரைப்புக்களின் கருப்பொருள்களை ஆராயும் சிற்பங்களை உருவாக்க அவருக்கு உதவுகிறது.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் காட்சிப்படுத்தப்பட்ட பன்வாரின் படைப்புகள், இடஞ்சார்ந்த உறவுகள் மற்றும் கலாச்சார சூழல்களை மறுபரிசீலனை செய்து சமகால சிற்பக்கலையில் அவரை ஒரு முன்னணி நபராக நிலைநிறுத்துகின்றன. அவரது கலைப்பயிற்சி பல்வேறு செல்வாக்குகளின் தடையற்ற ஒருங்கிணைப்பை பிரதிபலிக்கிறது. சிற்பக்

KALĀ COMMUNE

கலையின் எல்லைகளை அப்பால் தள்ளி, இடைநிலை கற்றல் மற்றும் புதுக்கொணர்வுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

KALĀ
COMMUNE

**ஹேமா ஷிரோனி** *Hema Shironi* (பிறப்பு 1991, கண்டி, இலங்கை; கொழும்பில் வசித்து பணிபுரிகிறார்) ஒரு பல்துறை கலைஞர். அவரது கலைப் படைப்புகள், பருப்பொருட்களை அடையாளம், நினைவகம், மற்றும் உரித்து ஆகியவற்றின் அடுக்கு எடுத்துரைப்புகளாக மாற்றுகின்றன. பூத்தையல், தையல், ஒன்றிணைத்தல் மற்றும் வழக்கத்திற்கு மாறான பருப்பொருட்களின் பயன்பாடு மூலம், ஷிரோனி குடிபெயர்ச்சி மற்றும் இடப்பெயர்வின் சிக்கல்களை பிரதிபலிக்கும் தொட்டுணரக்கூடிய வெளிப்பாடுகளை உருவாக்குகிறார்.

அவரது கலைப்பயிற்சியானது இலங்கையின் காலனித்துவ வரலாறு, உள்நாட்டு அமைதியின்மை மற்றும் அவரது சொந்த குழந்தைப் பருவத்தின் நிலையற்ற தன்மை ஆகியவற்றின் ஆழமான செல்வாக்கைக் கொண்டுள்ளது. பரந்த கலாச்சார மற்றும் வரலாற்று சூழல்களுடன் தனிப்பட்ட கதைகளை பின்னிப் பிணைக்கிறது. ஷிரோனியின் கலைப்படைப்புக்கள், பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து வரைந்து அவற்றை சமகால முக்கியத்துவத்துடன் நிரப்புவதன் மூலம் கைவினை மற்றும் நுண்கலைக்கு இடையிலான வழக்கமான எல்லைகளை சவால் செய்கிறது. அவரது கலைப்படைப்புகள், பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து வரைந்து அவற்றை சமகால முக்கியத்துவத்துடன் நிரப்புகிறது. புகைப்படங்களில் தையல் செய்வதின் பயன்பாடு அவரது படைப்புகளுக்கு ஒரு தனிப்பட்ட, நெருக்கமான தொடுகையைச் சேர்க்கிறது, நினைவகத்தை ஊடகத் தன்மையுடன் பின்னிப் பிணைக்கிறது, மேலும் அவரது படைப்புகளின் தூண்டுதல் தரத்தை மேம்படுத்துகிறது. பூத்தையல் மட்டுமல்லாமல், ஷிரோனி ஒட்டுவேலை மற்றும் வெட்டப்பட்ட துணிகளைப் பயன்படுத்துகிறார். நிராகரிக்கப்பட்ட பொருட்களை ஆட்படுத்தும் ஒழுங்கமைப்புகளாக மறுகற்பனை செய்கிறார்.

ஒவ்வொரு படைப்பும் சிதறடிக்கப்பட்ட வரலாறுகள், நினைவுகள் மற்றும் அடையாளங்களுக்கான ஒரு உருவகமாக உருப்பெற்று புதிய வடிவங்களில் மீண்டும் இணைக்கப்படுகிறது. இந்த நுட்பங்கள் தொடர்ந்து மாறிவரும் உலகில் அடையாளத்தின் மீள்தன் மற்றும் தகவமைப்புத் திறனை இயம்புகின்றது. இதன் விளைவாக வரும் படைப்புகள் உருவமைப்புகளுடன் செழுமையை பேணுகின்றது, பார்வையை வசீகரிக்கின்றன, மேலும் பார்வையாளர்களை உரையாடலுக்கு அழைக்கின்றன. ஷிரோனியின் மரபார்ந்த மனப்படிமம், ஊடக புத்தாக்கக் கலைக் கட்டமைப்பு, பாலினம் மற்றும் கலாச்சார கலப்பின் ஆய்வு ஆகியவை சமூகத்தை வரையறுக்கும் பலவீனமான தொடர்புகளை எடுத்துக்காட்டுகின்றன. வரலாறு மற்றும்

KALĀ COMMUNE

தனிப்பட்ட அனுபவங்கள் இரண்டும் தனிநபர்கள் மற்றும் ஊடகங்களில் எவ்வாறு விதிக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதன் மூலம் எல்லைகளைக் கடந்து செல்லும் கலையை அவர் உருவாக்குகிறார்.

KALĀ
COMMUNE

**றினோசன் சுசிமன்** *Rinoshan Susiman* (பிறப்பு 1993, மட்டக்களப்பு, இலங்கை; யாழ்ப்பாணத்தில் வசித்து பணிபுரிகிறார்) ஒரு பல்துறை கலைஞர். அவரது படைப்புகள் தனிப்பட்ட எடுத்துரைப்புக்களை சமூக மாற்றத்துடன் இணைக்கின்றன. றினோசனின் கலைப்பயிற்சி மனித உடல் மற்றும் உருவத்தைச் சுற்றி அமைகிறது. குறிப்பாக உணர்விலி நிலையில் உடலின் இயக்கங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த கருப்பொருள்களை அவர் ஆராய்வது பல்வேறு சமூகப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வழிவகுக்கிறது. மேலும் அவர் முதன்மையாக இந்த கருத்துக்களை வெளிப்படுத்த எண்மான(டிஜிட்டல்) ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றுகிறார். றினோசன் எண்மான மற்றும் பாரம்பரிய ஊடகங்கள் இரண்டையும் பயன்படுத்துகிறார், அன்றாடப் பொருட்களில், குறிப்பாக படுக்கை விரிப்பு மற்றும் போர்வையில் - அடையாளம், நினைவகம் மற்றும் உரித்தானவற்றுக்கான உருவகங்களில் தனித்துவமான கவனம் செலுத்துகிறார்.

அவரது பயிற்சியின் மையமானது உணர்விலி நிலையின் இயக்கங்கள் மற்றும் நிலையற்ற அனுபவங்களின் விளக்கப் பொறிப்புகளாக்கப்பட்ட அவரது படுக்கை விரிப்புகள் மற்றும் போர்வையின் தினசரி ஆவணப்படுத்தல் ஆகும். றினோசன் புதிய ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை தனது படைப்பு செயல்பாட்டில் ஒருங்கிணைந்த கருவிகளாகப் பயன்படுத்தி இந்த பதிவுகளை எண்மான படைப்புகளாக மாற்றுகிறார். தனது மடிக்கணினியை தனது வேலைத்தளமாக விவரிக்கும் அவர், அரூப படங்களை உருவாக்க தனது ஆவணப்படுத்தப்பட்ட படங்களை திரிபாக்கத்திற்கு உள்ளாக்குவதுடன், தனிப்பட்ட மற்றும் சமூக நிலப்பரப்புகளை மறுகற்பனை செய்யும் ஒரு இடக்கிடப்பியல் மொழியைப் பயன்படுத்துகிறார். அவரது படைப்புகள் சமூக விதிமுறைகளை கேள்விக்குள்ளாக்குவதுடன் எப்போதும் மாறிவரும் உலகில் நிலைத்தன்மை மற்றும் அடையாளத்தின் ஒழுகியல் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. சாதாரண விஷயங்களை ஆழமான கலாச்சார மற்றும் உணர்ச்சிபூர்வமான விசாரணைகளாக உயர்த்துவதன் மூலம், றினோசனின் கலை, பார்வையாளர்களை தனிப்பட்ட வரலாறு மற்றும் கூட்டு நினைவகத்தின் குறுக்குவெட்டுகளை மறுபரிசீலனை செய்ய சவால் விடுகிறது.

KALĀ
COMMUNE

**அகமது ஜாவேத்** *Ahmed Javed* (பிறப்பு 1992, லாகூர், பாகிஸ்தான்; லாகூரில் வாழ்ந்து பணிபுரிகிறார்) பாரம்பரிய நுட்பங்களினதும் சமகால முறைமைகளினதும் புத்தாக்கமான இணைவுக்காக கொண்டாடப்படும் ஒரு சமகால கலைஞர். கலைஞரின் படப்பிடிப்புக் கூடத்தினுள் உள்ள மாறும் செயல்பாடுகளை ஆவணப்படுத்துவதையும், புகைப்படம் எடுத்தல் மூலம் இந்த தருணங்களைப் படம்பிடிப்பதையும் அவரது பயிற்சி மையமாகக் கொண்டுள்ளார். பின்னர் இந்த படங்கள் அவரது படைப்பு செயல்முறைக்கு ஒரு அடித்தளமாக செயல்படுகின்றன. ஏனெனில் ஜாவேத், யதார்த்தத்திற்கும் கலை விளக்கத்திற்கும் இடையிலான எல்லைகளை ஆராயும் புதிய காட்சி விவரிப்புகளை உருவாக்குவதற்காக அவற்றின் பரிமாணங்களையும், சூழ்நிலைகளையும் கூறுகளையும் மாற்றியமைப்பதன் மூலம் அவற்றை உருமாற்றுகிறார். லாகூரில் உள்ள கலைகளுக்கான தேசிய கல்லூரியில் (NCA) கௌரவப் பட்டம் பெற்ற ஜாவேத், அந்நிறுவனத்தின் வளமான மரபுப் புகழிலிருந்து உத்வேகம் பெறுகிறார். NCA முகலாய மற்றும் ராஜபுத்திர மினியேச்சர்(மிகச் சிறிய அளவிலுள்ள அதிநுட்பமான சித்திரம்) ஓவியத்தின் மரபுகளைப் பாதுகாப்பதில் புகழ்பெற்றது. அதே நேரத்தில் நவீன நுட்பங்கள் மற்றும் வருணனை சாத்தியக்கூறுகள் மூலம் புத்தாக்கங்களை வளர்க்கிறது. பாரம்பரியம் மற்றும் பரிசோதனை மீதான இந்த இரட்டை முக்கியத்துவம் ஜாவேத்தின் கலைப் பார்வையை ஆழமாக வடிவமைத்துள்ளது, இது ஒரு சமகால கட்டமைப்பிற்குள் பண்டைய முறைகளை மறுபரிசீலனை செய்ய அவருக்கு உதவுகிறது.

ஜாவேத்தின் படைப்பு மினியேச்சர் ஓவியத்தின் சிறப்பியல்பு விவரங்களுக்கு நுணுக்கமான கவனம் செலுத்துவதை பிரதிபலிக்கிறது. குறிப்பாக துல்லியம் மற்றும் துடிப்பான எதிரிடைகளால் குறிக்கப்பட்ட முகலாய கலையில் badrang (பத்ராங்) நுட்பத்தால் அவர் ஈர்க்கப்பட்டுள்ளார். வரலாற்று ரீதியாக நிஜ வாழ்க்கை நிகழ்வுகளையும், சடங்கு ரீதியான வாழ்க்கையையும் ஆவணப்படுத்தப் பயன்படுத்தப்படும் இந்த நுட்பம், ஜாவேத்தின் படப்பிடிப்புக் கூட தருணங்களை ஆவணப்படுத்தும் அணுகுமுறையாக வெளிப்படுகிறது. அங்கு ஒவ்வொரு விவரமும் கவனமாகக் கருத்தில் கொள்ளப்பட்டு, பாரம்பரிய மினியேச்சர்களின் துல்லியத்தை எதிரொலிக்கிறது. ஆவணப்படுத்தலுக்கு அப்பால், அவர் தனது புகைப்படங்களில் உள்ள கூறுகளைத் திரிபாக்கத்திற்கு உள்ளாக்குவதன் மூலம், நிஜ வாழ்க்கை காட்சிகளை வெளிப்படையான காட்சி விவரிப்புகளாக மறுவடிவமைப்பதன் மூலம் இந்த தருணங்களை மறுபரிசீலனை செய்கிறார். பண்டைய பத்ராங்

நுட்பத்தை சமகால புகைப்படக் கலையுடன் இணைப்பதன் மூலம், கலை மற்றும் வரலாறு இரண்டையும் வடிவமைப்பதில் ஆவணப்படுத்தலின் பங்கைப் பற்றி சிந்திக்க பார்வையாளர்களை அழைக்கும் படைப்புகளை ஜாவேத் உருவாக்குகிறார்.

KALĀ
COMMUNE

**அகமது ரஸல்** *Ahmed Rasel* (பிறப்பு 1988, பாரிஷால், பங்களாதேஷ்; டாக்காவில் வசித்து, பணிபுரிகிறார்) ஒரு புகைப்படக் கலைஞர். அவரது படைப்புக்களானது அவருடைய இலக்கியப் பின்னணி மற்றும் பங்களாதேஷின் சமூக-அரசியல் நிலப்பரப்பைப் படம்பிடிப்பதில் அவர் கொண்டுள்ள கரிசனை ஆகியவற்றின் ஆழமான தாக்கத்தைக் கொண்டுள்ளன. அவரது கலை நடைமுறையானது நகரமயமாக்கல், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் வரலாற்று நினைவகம் போன்ற கருப்பொருள்களை ஆராய்கிறது. இது நாட்டின் வளர்ந்து வரும் அடையாளத்தின் ஆழமான கட்புல விவரிப்பை வழங்குகிறது. ரஸலினுடைய பங்களாதேஷ் இலக்கிய பின்னணி அவரது புகைப்படக் கலைக்கு கவியழகை உட்செருக்கிறது. இது அவரது படைப்பு முழுவதும் எதிரொலிக்கிறது.

அவரது வேலைப்பாடுகள் அவர் அகப்படுத்த விரும்பும் பிரச்சினைகளுக்குள் தன்னை மூழ்குவிப்பதற்காக பெரும்பாலும் ஆராய்ச்சி, களப்பயணம் மற்றும் பிரயாணம் போன்றவற்றின் விரிவான செயல்முறை மூலம் உருவாகின்றன. ரஸல் தனது ஒளிப்படக்கருவி வில்லைகளினூடாக கருப்பொருளை சட்டகமாக்குவதற்கு முன்னர் அதனை புரிந்துகொள்வதற்கும் அதனுடன் ஈடுபடுவதற்கும் கணிசமான நேரத்தை அர்ப்பணிக்கிறார். அவரது கலை மெய்யியலானது, செயற்கை அலங்காரங்கள் இல்லாமல் வாழ்க்கையை மெய்ம்மையாக முன்வைப்பதில் கவனம் செலுத்துகிறது.

ரஸல் இயற்கை ஒளிக்கு முன்னுரிமை அளிக்கிறார். தன்னுடைய ஒளிப்படங்களை வடிவமைப்பதற்கு பகல் நேர ஒளிக்கு இடமளிக்கிறார். "இரவுக்கு சொந்தமான" என்று பொருள்படும் *nocturnes* என்ற இலத்தீன் வார்த்தையின் அடிப்படையில் பெயரிடப்பட்ட அவரது *Nocturne series* இல், பங்களாதேஷில் செங்கல் உற்பத்தி போன்ற தொழில்துறைகளின் அப்பட்டமான யதார்த்தங்களைப் படம்பிடித்து காட்டுகிறார். குறைந்தபட்ச செயற்கை ஒளியூட்டலை நம்பியிருப்பதன் மூலமும், அரங்க மயமாக்கலையோ துடிம திரிபாக்கத்தையோ தவிர்ப்பதன் மூலமும், ரஸல் ஒளியினதும் நிழலினதும் இயற்கையான ஊடாட்டத்தை வலியுறுத்துவதுடன் தனது படங்கள் நம்பகத்தன்மையின் அடித்தளமாக இருப்பதை உறுதிசெய்கிறார்.

இவரது படைப்பில், பங்களாதேஷில் காற்று மாசுபாட்டின் முக்கிய காரணமான செங்கல் தொழிலின் சாம்பல் நிற புகை, சுற்றுச்சூழல் சீரழிவின் ஒரு

KALĀ COMMUNE

சக்திவாய்ந்த அடையாளமாக பதிவாகிறது. அதனை மாற்றியமைக்காத நிலையில் ஆவணப்படுத்தும் ரஸல், நகர்ப்புற மாசுபாட்டின் உடனடி பிரச்சினையை எடுத்துக்காட்டுகின்றார். இது தொழில்துறை நிலப்பரப்பின் போராட்டங்களை பிரதிபலிக்கிறது. மிகவும் உன்னிப்பான அணுகுமுறையொன்றின் மூலம், ரஸல் புகைப்படம் எடுத்தலின் வழக்கமான எல்லைகளை மீறி பார்வையாளர்களுக்கு சமகால பங்களாதேஷை வடிவமைக்கும் சமூக-அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் யதார்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய சவாலை விடுக்கிறார்.